# தூதன்

தூதன்-27 | பிப்ரவரி 2018 | தூது-2

"...உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"
ரோமர் 12:2




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| எங்கே சந்தோசம் | 14 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| Young Readers Column | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| அரசமரம் | 22 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 24 |
| ஆராதனை பாடல்கள் | 25 |
| வேதவினா போட்டி | 26 |
| தெரிந்து கொள்வோம் | 28 |
| Health Tips | 30 |
| Childrens Corner | 32 |
| Birthday Celebrants | 35 |
| Wedding Anniversary Celebrants | 37 |
| Hanukkah - The Festival of lights | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645

Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

## புத்தாக்க வாழ்வை நோக்கி (Towards Renewed Life)

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

இப்புதிய ஆண்டிலும் கடந்த ஒரு மாதத்தைக் கடக்கக் கிருபையளித்த கர்த்தருக்கு நன்றி சொல்லி, அவருடைய மக்களாய் நம் விசுவாச ஓட்டத்தைத் தொடருவோம். இந்தப் பிப்ரவரி மாதம் வசந்த காலத்தின் துவக்கமாகக் கருதப்படுகிறது. இயற்கையாகவே மரங்களில் புதிய இலைகள், தளிர்கள் தளிர்க்கும் காலம். இம்மாதம் 14-ம் தேதி சாம்பல் புதன் கிழமையிலிருந்து துவங்கும் தபசு காலமும் ஆன்மீக வாழ்வின் வசந்த காலமாகக் கருதப்படுகிறது. இந்நாட்களில் நோன்புகள் வழியே வாழ்வில் பல கட்டுப்பாடுகளைப் பின்பற்றி பழைய பாவ வாழ்வை விட்டு புது வாழ்வை கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்ப்பின் நினைவு கூறுதலில் உணர்ந்து நாம் நம்மைப் புத்தாக்கம் செய்ய முயற்சிப்போமாக! **“புத்தாக்கம்”** என்பது ஏற்கனவே இருந்த ஒன்றை புதியதாக மாற்றுவதாகவும், அல்லது பழையதை முழுவதும் விட்டுவிட்டு புதியதொன்றை அடைவதாகவும் புரிந்து கொள்ளப்படுகிறது. அந்த அடிப்படையிலே இறைவன் நமக்குத் தந்த ஒரேயொரு வாழ்வை மீண்டும் அவருக்கு நேராய்த் திருப்பவும், இதுவரையிலும் நாம் வாழ்ந்த சுயம் சார்ந்த வாழ்வை விடுத்து, இறைநலப் பொதுநல வாழ்வு வாழவும் ஆண்டவர் அருள்புரியட்டும் (Renewal can be basically understood in two polarized ways: One is to restart in a new direction the life that we are living and another is completely leave the past life style and start a new life style towards the divine for the common welfare).

**திருமறையில் புத்தாக்கம் (Renewal in Bible):** அடிப்படையிலே புத்தாக்க வாழ்வை அல்லது புதுப்பிக்கும் வாழ்வை வாழ்வது எப்படி என்பதை நிறைவாழ்வின் நூலாகிய திருமறையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். முதல் உடன்படிக்கை நூலான பழைய ஏற்பாட்டிலே புதுப்பிக்கும் ஆண்டவராகக் கடவுளைக் காணலாம். ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்குகிறார். நன்கு வாழ்ந்திருந்த இஸ்ராயேல் சமூகம் அடிமைத்தனத்திற்கு உட்பட்டபோது அவர்களைக் காப்பாற்றி புது வாழ்வுக்கு, விடுதலை வாழ்வுக்கு நேராக வழிநடத்தி மறுபடியும் வாழவைக்கிறார். தம் தீமையான வாழ்வு நெறியால் மீண்டும் விழுந்துபோன மக்களை மறுபடியும் புத்தாக்கம் செய்து வாழவைக்கிறார். இப்படி மறுபடியும் மறுபடியும் ஆண்டவர் மனித வாழ்வினைப் புத்தாக்கம் செய்து, புது நம்பிக்கையூட்டி வாழ வாய்ப்பு தருகிறதைக் காணலாம். (The former covenant book i.e. The Old Testament clearly picturizes that God is

God of life. He creates everything new from nothing or what's available. He liberates the people from slavery and renewed their life of freedom twice from Egyptian and then Babylonian slaveries. Thus God renews human life again and again).

இரண்டாம் அல்லது பிந்தைய அல்லது புதிய உடன்படிக்கையான புதிய ஏற்பாட்டில் இவ்விரண்டு உடன்படிக்கைகளையும் ஒன்றிணைத்து நிறைவாழ்வை, புதுவாழ்வை அருளிச் செய்ய தம் வாழ்வையே தியாகம் செய்த ஆண்டவர் இயேசுவின் வரலாற்றை, மீட்பின் திட்டத்தைக் காணலாம். தாம் வாழ்ந்த காலத்திலேயே தம் காலத்து மக்களின் வாழ்க்கையைப் புதுப்பித்த இறைவன் அவர். இறந்தவரை மீண்டும் உயிருடன் எழுப்பி புது வாழ்வைத் தொடரச் செய்தவர்; இல்லாதவருக்கு உணவளித்து, உறவளித்து மீண்டும் வாழச் செய்தவர். ஆகவே, அவர் வழியாக வாழ்வு புத்தாக்கம் பெற்றது. நம்மனைவருக்கும் நிலைவாழ்வின் புதிய நம்பிக்கை வந்தது. அதை நோக்கி நாம் இன்றும் பயணித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கேற்ப வாழவும் இந்த ஒரேயொரு வாழ்வில் அழைக்கப்படுகிறோம். (The second or New or latter Testament was fulfilled in the life of Jesus who has bridged the two Testaments through his vicarious oblating life. Even during his life on earth Jesus has renewed the lives of the dead through resurrection and the lives of the hungry and needy with all provisions of life. Such an awesome God of renewal Jesus is!).

### திருமறையில் புத்தாக்கக் கண்ணோட்டங்கள் (Various perspectives of renewal in the Bible):

**1. அரசியல் புத்தாக்கம் (Political Renewal):** 1 சாமுவேல் 11-ம் அதிகாரத்தின்படி கர்த்தர் இஸ்ரவேலின் அரசை சவுலின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் உறுதிப்படுத்துகிறார் (11:14). அம்மோனிய படையெடுப்பு மற்றும் பயமுறுத்தலினின்று காத்து மீண்டும் அரசை உறுதிப்படுத்துகிறார். இப்படி எண்ணற்ற உதாரணங்கள் திருமறையிலே உள்ளன. (God reestablishing the political kingdom of Israel according to 1 Samuel 11:14 and there are so many such occasions).

**2. சமூகப் புத்தாக்கம் (Social Renewal):** ஏசாயா இறைவாக்கினரின் 40-ம் அத்தியாயத்தில் எருசலேமின் போரை முடித்து மக்களை புதுவாழ்விலே மீண்டும் நிலைப்படுத்தும் கடவுளின் திட்டத்தை நாம் காணலாம். புதிய ஆற்றலைத் தந்து வாழ்வை நிலைநிற்கச் செய்யும் (ஏசாயா 40:31) கர்த்தராக நாம் அறிகிறோம். (God is reinstating a peaceful life to people of Jerusalem by renewing their strength according to Is.40:31)

3. உள்ளத்தின் புத்தாக்கம் **(Renewal of heart):** எசேக்கியேல் 36:26-ன்படி ஆண்டவர் நவமான (புதிய) இருதயத்தைக் கொடுக்கிறார். கல் போன்ற பழைய உள்ளம் / இருதயம் எடுத்துப் போடப்பட்டு, உடலிலே சதையான, உணர்வுள்ள, உயிரோட்டமான இருதயம் கர்த்தரால் கொடுக்கப்படுகிறது. இது உள்ளத்தின் புத்தாக்கம். (According to Ezekial 36:26, God is renewing the heart by exchanging the hardened rocky heart with the sensitive soft heart).

4. ஆவிக்குரிய புத்தாக்கம் **(Spiritual Renewal):** 51-ம் சங்கீதத்தின் 10-12 வசனங்களில் சங்கீதக்காரராகிய தாவீதரசன் சுத்த இருதயத்தையும், நிலைவரமான ஆவியையும் தமக்குள்ளே புதுப்பிக்கும்படி வேண்டுகிறார். அதன்படி பழைய மாம்சமான, சுயநலமான வாழ்வைக் களைந்து இறைவனுக்கு நேரான, பாவமற்ற புதுவாழ்வை வாஞ்சிக்கிறார். இதுவே இறைவன் விரும்புகிற பலி என்றும் குறிப்பிடுகிறார். (According to Psalmist King David in Ps.51:10-12 there is an aspiration and anguish for a renewed spirit and a clean heart so that he continue to live a sinless, non fleshy and selfless life for the Lord.)

5. உடல் புத்தாக்கம் **(Physical renewal):** உடல் புத்தாக்கம் பெறுவதையும், அதையும் இறைவன் செய்து நிறைவேற்றுவதையும் திருமறை குறிப்பிடுகிறது. ரோமர் 13:14-ன்படி தீமையான இச்சைகளுக்கு உடலைப் பேணாமல், அதை இறைவனின் ஆலயமாகக் காத்து நடக்கவேண்டும். (1 கொரி.6:19). (According to Romans 13:14& 1 Cor.6:19 we are called to renew our bodies from all evil physical urges and make it the Temple of God.)

இப்படியாக அகத்திலும், புறத்திலும், வாழ்வைப் புதுப்பிக்கும் ஆண்டவர் வானத்தையும், பூமியையும் புதிதாக்குகிறவர் (சங்.104:30, வெளி.21:1). அவரது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, சித்தத்தைச் செய்து நம் வாழ்வை அவருக்குள் புதுப்பிக்க அர்ப்பணிப்போம்! அப்படிப்பட்ட நற்கனி தரும், புதிய தளிர்கள் தோன்றும் காலங்களாய் இம்மாதத்தின் லெந்துகாலங்கள் நமக்கு விளங்குவதாக! ஆமென்.

"புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே
அதைப் புகழ்ந்து காக்கவே
தீய மனதை மாற்ற வாரும் தூய ஆவியே".

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

# ஆயரம்மா மடல்

நல்ல பங்கைத் தெரிந்துகொண்ட மரியாள் - லூக்கா 10:38-42

(Mary - Chose the Good Portion)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இந்த புதிய ஆண்டிலும் நம்மைக் கடந்த மாதம் முழுவதும் காத்த கர்த்தரைத் துதிப்போம். இந்த பிப்ருவரி மாதம் ஒரு வசந்த காலத்தின் மாதம். மரங்களில் புதிய இலைகள் துளிர்க்கும் காலம். அதேபோல நம் விசுவாச வாழ்வின் வசந்த காலமான லெந்துகாலம் இம்மாதத்தின் பதினான்காம் நாள் (14-02-2018) சாம்பல் புதன் கிழமையிலிருந்து துவங்குகிறது. இலைகள் மாத்திரம் அல்ல, கனி நிறைந்த வாழ்வாக நமது வாழ்வை கிறிஸ்துவுக்கு நேராக மாற்றிக்கொள்ளும் "நல்ல பங்கை" (Good Portion) மரியாளைப்போலத் தெரிந்துகொள்ள ஒரு நல்ல வாய்ப்பை இக்காலங்களில் கர்த்தர் நமக்குக் கட்டளையிடுகிறார்.

பொதுவாக, மார்த்தாள் - மரியாள் வாழ்ந்த ஊர் பெத்தானியா என்று அறியப்பட்டாலும், லூக்கா நற்செய்தியாளர் 'ஒரு கிராமம்' என்று மட்டுமே குறிப்பிடுகின்றார். அந்த கிராமத்திற்குள் இயேசுகிறிஸ்து பிரவேசித்தபோது மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு பெண் அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொள்கிறார் (10:38). ஆனால் அந்த வீட்டில் அவருடைய சகோதரி மரியாள் என்பவரும் இருக்கிறார் (10:39a). ஆண்டவரை வரவேற்ற மார்த்தாள் சிறப்பு விருந்தினராகிய அவரை உபசரிக்கும்படியாய் பற்பல வேலைகளில் ஈடுபடுகிறார். ஆனால் மரியாளோ ஆண்டவருடைய பாதத்தில் உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார் (10:39b). வந்த விருந்தாளியைக் கவனிக்காமல், தனக்கு ஏற்ற உதவியும் செய்யாமல் தன் சகோதரி உட்கார்ந்து கொண்டிருந்ததை மார்த்தாள் கவலையுடன், அதேநேரம் உரிமையுடன் கர்த்தரிடம் தெரியப்படுத்துகிறார் (10:40). ஆனால் இயேசு நாதர் மார்த்தாளுக்குச் சொன்ன பதில்தான் ஆச்சரியமாய் இருக்கிறது.

"மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டார்" (10:41,42).

இதுவே மார்த்தாள் கேட்ட கேள்விக்கு (உமக்குக் கவலை இல்லையா) இயேசுவின் பதிலாக இருக்கிறது. ஒரு சாதாரண மனிதனின் பார்வையில் இந்த பதில் ஒரு புதிராக இருக்கிறது. பொதுவாக நமது வீட்டில் விருந்தாளிகள் வரும்போது அவர்களை உபசரிக்க நாம் முயற்சி செய்கையில் நம்முடன் பிறந்த சகோதரி அந்த விருந்தாளி பேச்சைக் கேட்க சும்மா உட்கார்ந்துவிட்டால் நாம் ஏற்றுக்கொள்வோமா? அதிலும் இப்படி ஒரு பதிலை அந்த விருந்தினர் சொன்னால் நம் மனநிலை எப்படி இருக்கும்! ஆனால் இயேசுநாதர் சொன்ன பதிலில் சில ஆழமான உண்மைகள் உள்ளன.

### 1. இயேசுவே முதற்பங்கு (Jesus is the first and best portion):

வீடு தேடிவரும் விருந்தினரின் வார்த்தைகளுக்கு முதலிடம் கொடுத்து அவர் சொல்வதை முதலில் கேட்பதுதான் நல்ல மரபு. அவரை உபசரிப்பது அடுத்த நிலை. அதிலும் இயேசுவை கிறிஸ்துவாக, தலைசிறந்த ரபீயாக ஏற்றுக் கொண்டதினால்தான் மார்த்தாள் அவரைத் தன் வீட்டிற்கு அழைக்கிறார். அப்படியிருக்க விருந்தாளியின் வார்த்தையை முதலில் கேட்டு கவனிக்கவேண்டும். நம்முடைய பரபரப்பான நவீன வாழ்க்கையில் (busy modern life), அன்றாடம் செய்யும் வேலைகளின் மத்தியில் (Monotonous work) ஆண்டவருடைய வார்த்தைகளை அமர்ந்து, தியானித்து கேட்க நமக்கு நேரம் உண்டா? நிச்சயமாக இந்த தபசுகாலத்தில் உண்டாக்கவேண்டும்.

### 2. இறையரசே முதற்பங்கு (Kingdom of God is the first and best portion):

மத்தேயு 6:33ன்படி, "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவரது நீதியையும் தேடுங்கள்" என்ற ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும். அதனால், உலகத்தைக்குறித்த அக்கறை வேண்டாமென்று அர்த்தமில்லை. ஆண்டவரைப் பற்றிய அக்கறையின்றி உலகத்தைப்பற்றி மாத்திரம் கொள்ளும் அக்கறை அர்த்தமற்றது.

"ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன". ஆகவே மரியாள் ஆண்டவருக்கு செலுத்த வேண்டிய கனத்தை முதலாவது செலுத்தி இறையரசில் பிரவேசிக்க தன்னைக் கீழ்ப்படுத்துகிறார். நம்மில் அநேகர் ஆண்டவரைக் கனப்படுத்தி நம்மைத் தாழ்த்தாமல் செய்யும் எந்தக் காரியமும் நம்மை இறையரசில் சேர்க்காது.

### 3. விசுவாசமே முதற்பங்கு (Faith is the first and best portion):

"கிரியையில்லாத விசுவாசம் செத்தது" ஆனால் விசுவாசம் இல்லாத கிரியையும் பயனற்றது. எந்தச் சூழ்நிலையிலும் ஆண்டவரை மட்டும் நம்பி செயல்படவேண்டும். ஏனெனில் ஆண்டவருடைய வார்த்தைகள் நமக்கு நல்ல ஆலோசனைகளாகவும், நல்வழியில் நடத்துவதாகவும், உலக அழுத்தங்களிலிருந்தும், 'தான்' என்கின்ற அகந்தையின் மாம்ச இச்சைகளிலிருந்தும் நம்மைத் தப்புவிக்க வல்லது. நம் தேவைகளைச் சந்திக்க வல்லது. எதை நாம் முக்கியப்படுத்தவேண்டும் என்று நடத்தவல்லது.

ஆகவே ஆண்டவருக்குச் செய்யும் கடமைகளில், கொடுக்கும் கனத்தில் மார்த்தாளைப்போல் மற்றவரைக் குறைகூறாமல், மரியாளைப்போல் அவர் பாதம் அமர்ந்து, அவர் வார்த்தை கேட்டு, அவர் சித்தம் செய்வோம்! இந்த லெந்து நாட்கள் நமக்கு பயனுள்ள காலங்களாய் இருப்பதாக!!

"பாதம் ஒன்றே வேண்டும் - இப்பாரில்
எனக்கு மற்றேதும் வேண்டாம்"

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - பிப்ரவரி 2018

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-02-2018 | படைப்பின் வீழ்ந்த தன்மை | ஆதியா. 3:1-10 | ரோமர் 3:21-26 | மத்தேயு 18:23-25 | 53 |
| 09-02-2018 குணமாக்கும் வெள்ளி | முழு நலனும் சுகம் பெறுதலும் | யோபு 42:1-12 | 2 கொரிந். 12:1-10 | யோவான் 5:1-9 | 6 |
| 14-02-2018 சாம்பல் புதன் இரவு 8.30மணி | சிலுவையும் சுயவெறுப்பும் | யோவேல் 2:12-20 | கலாத். 2:15-21 | லூக்கா 9:23-27 | 32 |
| 16-02-2018 | தீண்டத் தகாதோரைத் தீண்டுதல் | 2 இராஜா. 5:1-10 | எபி. 13:8-17 | மத்தேயு 8:1-4 | 10:1-12 |
| 23-02-2018 | வாழ்வு காக்கும் விசுவாசம் | 2 இராஜா. 4:1-7 | அப்போ. 5:12-16 | லூக்கா 5:17-26 | 72 |

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

**நீர் என்னைக் காண்கிற தேவன். ஆதியாகமம் 16:13(b)**

நம்மேல் நினைவாயிருக்கிற நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

"ஆபிரகாமின் தேவன் யார்" என வாழ்வில் நம்பிக்கையற்று, ஆதரவற்று, அன்பு காட்ட ஆளில்லாத ஆகார் என்பவளுக்கு வெளிப்படுத்திய இடம்தான் "லகாய்ரோயி". தன் கண்ணீரை விசாரிக்க, தன் கஷ்டத்தைக் கண்டுணர யாருமே இல்லை என்று நினைத்த ஆகாரை, இதுவரை அவள் வாழ்வில் மறைவாயிருந்த தேவன் போல காணப்பட்டவர், "நான் உன் கண்ணீரைக் கண்டேன்" என அவளுக்கு வெளிப்படுத்திய இடம்தான் லகாய்ரோயி. அதுவரை அந்த துரவுக்கு வேறு பெயர் இருந்தது. ஆகாருக்குத் தேவனோடுள்ள அனுபவத்தின் (நீர் என்னைக் காண்கிற தேவன்) காரணமாகவே, அந்த துரவுக்கு லகாய்ரோயி எனப் பெயர் வந்தது. (ஆதி. 16:14). கிறிஸ்தவ வாழ்வு அனுபவம் நிறைந்த வாழ்வு என அறியும் இடமே லகாய்ரோயீ. இந்த லகாய்ரோயீ என்பது நம் தேவாலயமே. தேவாலயத்தில் நம்முடைய வருத்தத்தையும், தாகத்தையும், பசியையும், இளைப்பையும் போக்கி திருப்தியையும், இளைப்பாறுதலையும், நிச்சயத்தையும் கொடுக்கத் திறக்கப்பட்ட ஊற்றாகிய கிறிஸ்து உண்டு. லகாய்ரோயீக்கு (தேவாலயம்) ஓடிவருகிற நமக்குத் தேவன் எப்படி தம்மை வெயிப்படுத்துகிறார் என்பதை இம்மாதத்தில் தியானிப்போம்.

### 1. லகாய்ரோயீ - நொந்துபோனவர்களைத் தேற்றுமிடம் (ஆதி.16:15-16) :

சாராளின் அடிமைப்பெண்ணாகிய ஆகார், கர்ப்பவதியாய் அவளை விட்டு ஓடிவருகிறாள். ஓடிவந்ததினிமித்தம் பிள்ளை நிலைநிற்குமோ, அழிந்து விடுமோ, பிறப்பிக்க முடியுமோ, முடியாதோ என்ற அங்கலாய்ப்பு ஒரு பக்கம், சாராளின் கடினமான நடத்துதல் மீண்டும் மீண்டும் சிந்தையில் தோன்றி மனதை நோகப்பண்ணின காயங்கள் ஒருபக்கம். இவற்றால் சோர்ந்துபோய், வாழவழி அறியாமல், திக்கற்று கலங்கின நேரத்தில், அவள் அங்கலாய்ப்பை, அவள் நிலைமையை அறிந்திருக்கிறவராகவும், அவள் வாழ்வதற்கு வழியை அறிவிக்கிறவராகவும் அவளுக்குத் தம்மை வெளிப்படுத்தி, தேவன் அவள் காயங்களை ஆற்றித் தேற்றுகிறார். பிறப்பிக்க முடியுமோ என மனம் அஞ்சிய அவளை, ஒரு குமாரனையும் பெற்றெடுக்கும்படி பெலப்படுத்தினார் (16:16).

நமக்கு விரோதமாய் எழும்பின மனிதனின் சூழ்ச்சிகள், வஞ்சனைகள், நம்பிக்கைத் துரோகங்கள் போன்றவைகள் நம் சிந்தையில் மீண்டும் மீண்டும் தோன்றி நோகப்பண்ணும். காயங்கள் ஒருபக்கம், நமக்குள் தேவன் துவங்கின விசுவாசம், பரிசுத்தம், நம்பிக்கை, அன்பு போன்றவற்றை உலகிற்குமுன் பிறப்பிக்க பெலம் இல்லாத நம் அவயவங்களால் சந்தித்த தோல்வியால் உண்டான சோர்வு ஒருபக்கம். இப்படி நொறுங்கிப்போய் தேவாலயத்திற்கு வரும் நம்மை, சிறுவயது முதல் நம் நம்பிக்கையாயிருக்கிற ஆண்டவர், அவருடைய தழும்புகளினால் நம் காயங்களை ஆற்றி, தம்முடைய பரிசுத்த ஆவியின் ஈவை நமக்குத் தந்து, கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்தும் பாத்திரமாக வாழ இம்மாதத்தில் நம்மைப் பெலப்படுத்துவார். அடிமையாயிருந்த ஆகாரை தேவன் நினைத்தருளினார் என்றால் பிள்ளைகளான நம்மை நினைத்தருள்வது எத்தனை நிச்சயம்.

**2. லகாய்ரோயீ - இழப்பில் ஆறுதல் தரும் இடம் (ஆதி.25:8-25):**

ஆபிரகாம் மூலமே ஈசாக்கு தேவசித்தத்தை அறிந்துகொண்டிருந்தான். ஆதனால் ஆபிரகாம் மரித்ததால், இனி யார் மூலம் தேவன் தன்னை நடத்துவார் என்றும், தாயின் இழப்பினால் உண்டான துக்கத்தை ரெபெக்காளைத் தந்து ஆறுதல்படுத்தின தகப்பனின் இடத்தை யார் நிரப்புவார் என்றும் ஈசாக்கு ஆறுதலற்று கலங்கினான். அவனை லகோய்ரோயீயில் தேவன் சந்தித்து, தம்முடைய நடத்துதல் ஆபிரகாமோடு முடிந்து போகாமல், அவனுக்கும் தொடர்ந்து உண்டு என்கிற நம்பிக்கையை அவனுக்குக் கொடுத்து (25:11), ரெபெக்காளைத் தந்து துக்கத்தை ஆறப்பண்ணின தகப்பனின் இடத்தை தேவன் நிரப்பி, ஆபிரகாமின் இழப்பினிமித்தம் உண்டான துக்கம் மாறும்படி அவனுக்கு இரட்டைப் பிள்ளைகளை அவன் ஜெபத்தின் பலனாகக் கொடுத்து, ஆறுதல் படுத்துகிறார் (25:21,24). அவனை இழப்பிலிருந்து ஆசீர்வாதத்திற்கு நடத்துகிறார்.

நமக்கு அருமையானவர்களை இழந்ததினாலோ, தேவநடத்துதலை அறிவிக்கும் ஆவிக்குரிய தகப்பன்/தாய் போன்றவர்களை இழந்ததினாலோ, வேலை, சொத்து, சுகம் போன்ற எந்த இழப்புகளினால் கலக்கமடைந்து துக்கமுகத்தோடு தேவாலயத்திற்கு வந்தாலும், இம்மாதத்தில் தேவன் நம்மைச் சந்தித்து, நம் மேய்ப்பராக நம்மை அமர்ந்த தண்ணீரண்டையில் வழிநடத்தி, தேவாலயத்தில் ஜெபிக்கும் ஜெபத்திற்கு பலனாக இரட்டத்தனையான நன்மையால் நிரப்பி ஆறுதல் படுத்துவார். இழப்பிலிருந்து ஆசீர்வாதத்திற்கு நேராக நடத்துவார். கர்த்தர் இம்மாதத்தில் லகாய்ரோயீயின் அனுபவத்தைத் தந்து நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

### சிந்திக்க ஒரு சிறுகதை

வின்னி தன் மகள் பிரின்சியை மிகவும் நேசித்தாள். பிரின்சி 8-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். நன்கு படிப்பாள். எப்போதும் புத்தகமும் கையுமாய் இருப்பாள். ஏனென்றால் Maths தவிர மற்ற அனைத்துப் பாடங்களையும் மனப்பாடம் செய்து படிக்கும் வழக்கம் இருந்ததே அதற்குக் காரணம். காலையில் எப்போதுமே பள்ளிக்குப் புறப்படுவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்தான் விழிப்பாள். விழித்தபின்னும் உடனே போய் Brush பண்ணி தன்னை refresh செய்துகொள்ளமாட்டாள். அம்மா கால்மணி நேரம் சொல்லிக்கொண்டே இருந்தால்தான் தன் படுக்கையை விட்டு எழுவாள்.

வின்னிக்கு, பிரின்சி ஒரே பிள்ளையானதால், பிரின்சிக்கு மிகவும் செல்லம். அவள் வீட்டில் எந்த வேலையும் செய்யச் சொல்வதில்லை. எனினும், அவளுக்கு ஒழுங்கு வரவேண்டுமென்பதால், அவள் 7th grade வந்ததும், அவளுக்கு வீட்டில் ஒரே ஒரு வேலை கொடுத்தார்கள். அது என்ன வேலையென்றால், அவள் படுத்த படுக்கையின் விரிப்பையும், அவள் மூடின blanketஐயும் cleanஆக மடித்து வைப்பதே. அந்த வேலையை பெரும்பாலும் அவள் செய்வதே இல்லை. Lateஆக எழுந்திருப்பதாலும், அவ்வேலையைச் செய்ய விருப்பம் இல்லாததாலும் அதைச் செய்வதில்லை.

வின்னிக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. பிரின்சியை, 'சீக்கிரம் எழுந்திரு' என பலமுறை சொல்லியும், அவள் மனம் மாறவில்லையே என்ற வருத்தம் அவளுக்கு. அப்போதுதான், "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" என்கிற வசனம் ஞாபகத்திற்கு வந்தது. எனவே வின்னி இவ்வாறு ஜெபம் பண்ணினாள். "ஆண்டவரே, என் மகள் பிரின்சியை நினைத்தால், எனக்கு வேதனையாக உள்ளது. அவள் உமக்கு முதலிடம் கொடுப்பதில்லை. அவள் lateஆக எழுவதால், காலையில் Bible-ம் வாசிப்பதில்லை, ஜெபிப்பதுமில்லை. சாயங்காலத்திலும் சிலநாட்கள் உம்மைத் தேடுவதில்லை. மிகவும் சோம்பேறியாய் இருக்கிறாள். மிகுந்த செல்லம் கொடுத்து கெடுத்த என் பாவத்தை மன்னியும், அவளின் சோம்பேறித்தனத்தை மாற்றும்" என சொல்லி வெகுநேரம் அழுது கொண்டிருந்தாள்.

அன்று வியாழன் இரவு. வெள்ளி, சனி விடுமுறை என்பதால் பிரின்சிக்கு ரொம்ப சந்தோஷம். வெள்ளிக்கிழமை காலையில் எப்போதும்போல் மூவரும் ஆலயத்திற்குச் சென்றார்கள். ஆலயத்திலும், அம்மாவும் அப்பாவும் தங்கள் மகளின் சோம்பேறித்தனம் மாறும்படிக்கே ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஆலயம் முடிந்து Junior church துவங்கியது.

அன்று சோம்பேறித்தனத்தையும், அதன் விளைவையும் பற்றி பிள்ளைகளுக்கு, நீதிமொழிகளின் சில வசனத்தைக் காட்டி, அவர்களுக்கு ஆலோசனை சொன்னார் Junior church teacher திவ்யா. "சோம்பேறித்தனம் பற்றிய வசனங்கள் நீதிமொழிகளில் அதிகம் உள்ளது. அவ்வசனங்களை வாசித்துப் பார்த்தால் சோம்பேறிக்கு நிகழும் பிரச்சனைகளைச் சொல்லும்போதெல்லாம், ஜாக்கிரதையுள்ளவனுக்கு வரும் ஆசீர்வாதங்கள் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்" எனச் சொன்னார்கள். பிள்ளைகளைச் சத்தமாக நீதி.12:27, 13:4, 12:24 ஆகிய வசனங்களை வாசிக்கச் சொன்னார்கள்.

கவனித்தீர்களா! சோம்பேறித்தனம் முதலில் நம் மனதில் ஜாக்கிரதையின்மைக்கு இடம் கொடுக்கும்போது நமக்குள் வருகிறது. மனதில் வந்தபின் அதிகமான நேரம் தூங்குதல்(நீதி.6:9), சும்மா இருத்தல் (நீதி.21:25), பொருளின் மேன்மையைச் சிந்திக்காத நிலை (நீதி.12:27), தேவனுக்கு முதலிடம் கொடுக்காமல் இருத்தல், மற்றவர்களுக்குக் கஷ்டமாயிருத்தல் (10:26) போன்ற செயல்களாக வெளிப்படுகிறது. மேலும் மேலும் இச்செயல்களுக்கு இடம் கொடுத்துக்கொண்டே இருந்தால் தேவனோடும் மனிதரோடும் உள்ள உறவை முற்றிலும் பட்சித்துப் போட்டுவிடும் எனச் சொல்லி சோம்பேறித்தனம் என்ற பாவத்தின் தன்மையைக் கூறி எச்சரித்தார்கள்.

இதைக்கேட்ட பிரின்சிக்கு பயமாக இருந்தது. அவள் பாடத்தை ஜாக்கிரதையாய் கவனிக்காததால்தான் மனப்பாடம் செய்யவேண்டிய நிலை, அதிக தூக்கம் போன்ற பழக்கங்கள் வந்திருந்ததை பிரின்சி உணர்ந்தாள். "இயேசுவே, என்னை ஜாக்கிரதையுள்ளவளாய் மாற்றும், என் சோம்பேறித்தனத்தை மன்னியும், என் உள்ளத்தில் வாரும், உமக்கு முதலிடம் கொடுக்க உதவி செய்யும்" என கண்ணீரோடு ஜெபித்தாள். சோம்பேறித்தனத்திலிருந்து விடுதலை பெற்றாள். பெற்றோருக்கும், மற்ற அவளின் friendsக்கும் இப்போது மிகவும் உதவி செய்பவளாகவும், ஜாக்கிரதையுள்ளவளாகவும் வாழ்கிறாள்.

**வேதவாசிப்புப் பகுதி :** மத்தேயு 25:14-30
**மனப்பாட வசனம் :** நீதிமொழிகள். 26:16

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி்.பர் ஆல்வின், உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

தேவனுடைய திருவுளச்சித்தத்தின்படி புது நம்பிக்கையோடும் வாக்குறுதிகளோடும் இவ்வருஷத்தைத் துவங்க தேவன் கிருபை செய்தார். அவருடைய ஊழியத்தைச் செய்ய என்ன நோக்கத்தோடு அவர் நம்மை அழைத்தாரோ அந்த நோக்கத்தை அவருடைய சித்தத்தின்படி நிறைவேற்ற மறுபடியும் நம்மை அர்ப்பணிப்போமாக! ஒவ்வோரு காரியங்களையும் புதிய சவால்களோடு தேவன் நம்மைக் கண்காணித்து வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு முன்செல்வோமாக. இவ்வண்ணமாக நம் ஆன்மீக வாழ்வை வலுப்படுத்த இவ்வருடம் நாம் புதிய வேதவாசிப்புத் திட்டத்தைத் துவங்கியுள்ளோம். யாவரும் அதைப் பின்பற்றி வருகிறீர்கள் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். அதின் நகல் நமது வலைதளத்தில் உள்ளது. பெறாதவர்கள் யாவரும் அதைப் பயன்படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஜனவரி-12 அன்று நமது சிறுவர் பாடசாலையின் புதிய பாடபுத்தகம் வெளியிடப்பட்டது. இப்புது முயற்சிக்கு நமது சிறுவர் பாடசாலையின் ஆசிரியர்களை எழுதுவதற்கு உற்சாகப் படுத்திய நமது ஆயர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை பொறுப்பெடுத்து கடைசிவரை உழைத்த நமது சிறுவர் பாடசாலை கண்காணிப்பாளர் திருமதி. ஜெயந்தி சம்பத் அவர்களுக்கும் மற்றும் அவர்களோடு தங்களை அர்ப்பணித்து உழைத்த அனைத்து ஆசிரியர்களுக்கும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனவரி-19 அன்று நமது சிறுவர் பாடசாலை ஆரம்பமானது. அதில் பணிபுரிய புதிதாகத் தங்களை அர்ப்பணித்துள்ள அனைத்து ஆசிரியர்களையும் வாழ்த்துகிறேன். இந்த வருடமும் நாம் சிறுவர் பாடசாலையில் புதிய மதிப்பெண் குறியீட்டுத் திட்டத்தைப் பின்பற்ற உள்ளோம். இதன் மூலமாக நமது சிறுவர் அநேகருக்கு பரிசுகள் பெறுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உற்சாகப் படுத்தும்படியாக உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜனவரி-26 அன்று நமது திருச்சபையும் நமது அனைத்து கிளைத்திருச்சபைகளும் இணைந்து சுற்றுலாவாக அலைன் சென்றுவர தேவன் கிருபை செய்தார். எல்லோரும் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும், கடவுளின் மகிமைக்காகத் தங்கள் உறவைக் கட்டவும் அற்புதமான கூட்டுறவு கொண்டிருக்கத் தேவன் கிருபை செய்தார். இந்தக்

கூட்டுறவுகளைக் கட்டியெழுப்பத் தொடர்ந்து வரும் நாட்களில் தேவ அன்பை பகிர்ந்துகொள்வதன் மூலம் அவர் நாமத்தை மகிமைப்படுத்த அனைவரையும் வேண்டுகிறேன்.

இந்த மாதத்தின் அனைத்து நிகழ்வுகளுக்காகவும், விஷேசமாக, கர்த்தருக்குச் சித்தமானால் நாம் பிரவேசிக்க இருக்கும் லெந்து காலங்களுக்காகவும ஜெபிக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

## Church of South India, Tamil Parish, Dubai.

# VBS 2018

**Date**

**March 16- 24**

**Theme**

**CRAFTED BY GOD, BUILT FOR A PURPOSE**

**Venue**

**Holy Trinity Church**

**Dubai**

## வாழ்த்துகிறோம்

"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"

கர்த்தருடைய கிருபையால் ஜனவரி மாதம் 18-ம் தேதி

பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

Mr.B.Baiju & Mrs. B.Babitha

கர்த்தருடைய கிருபையால் ஜனவரி மாதம் 24-ம் தேதி

பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

Mr.T.Sibi Vetha Raj & Mrs.S.Genilin

இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# எங்கே சந்தோஷம்?

மலர்ஒத்த சிலர்வைத்த முகத்தாலே
கண்ணுக்கு சந்தோசம்
குலைரசங் கசியுங் குரலாலே
காதுக்கு சந்தோசம்

மெல்விரல் நல்மனம் அணைப்பிலே
குழந்தை சந்தோசம்
வல்தேவன் வாழ்விடம் இயற்கையிலே
ஐம்புல சந்தோசம்

நீர்மேல் எழுத்தென மாறுமுகம்
உயிர்பெறுமோ சந்தோசம் ?
வேர்மேல் தளிர்மரச் செழிப்பிலே
நிறைந்துவரும் சந்தோசம்

கொப்பளிக்கும் கோபத்தை அடக்கினால்
கொழுந்துவிடும் சந்தோசம்
துப்பிவிடும் எரிச்சல் தப்பியோடி
ஒழிந்துவிடும் சந்தோசம்

கொடுப்பதில் கிடைப்பது சந்தோசம்
கொடிபறக்கும் சந்தோசம்
கொடுப்பதைக் கெடுப்பதின் கொடுமையைத்
தடுப்பது சந்தோசம்

தெய்வீகம் இருப்பிடத்தின் அடையாளம்
மெய்யான சந்தோசம்
பொய்,பகை சூழ்ச்சிகள் வீழ்ச்சிகள்
சாத்தானால் அசந்தோசம்

கர்த்தருக்குள் இருப்போர் கவலைகளை
மறப்போர் ஊறும்சந்தோசம்
ரட்சகருள் பச்சமாய் இருப்போர்
உச்சத்திலே சந்தோசம்

இதயத்தை எளிதாக்கி புதையலைத்
தேடிவரும் சந்தோசம்
உதயமுதல் அடைந்தபின்னும் கைவிடாதோர்
கர்த்தருள் சந்தோசம்

பரிசுத்த ஆவிதரும் சந்தோசம்
பரவசிக்கும் சந்தோசம்
பரிசுத்த வேதத்தின் பரிசாகும்
பரவிவரும் சந்தோசம் !

ஆதாரம் : ரோமர் 14:17, 2 கொரி.9:7, பிலிப்பியர் 2:17,18, 4:4
சங்கீதம் 133:1, ஏசாயா 65:13, ஆபகூக் 3:17,18
கவிதை எண் : 205.
ஆக்கம் : மணிமுத்து.

# FREEDOM AT LAST!

I was covered in fear
Debts, deadlines, no time
All this was too much, Oh Dear!

I was covered in shame
If someone saw my heart
I won't have even a single good name.

But now I'm happy
How is that you ask?
Well, it was no difficult task.

Just pray to the Lord Jesus Christ
That's right
Close the door kneel down and pray
That's what you should do everyday.

What should you pray?
Ask for repentance
And God will give you assurance
That he is with you.

Alcina Rosita.

## யாக்கோபு

யாக்கோபின் குமாரராகிய சிமியோனும், லேவியும், அப்பட்டணத்தின் அனைத்துப் பொருட்களையும் அழித்துப்போட்டனர். அவர்கள் பட்டணத்தை அழித்துக்கொண்டிருக்கையில், முந்நூறு பேர் திடீரென எழும்பி, சிமியோன்மீது கற்களை வீசி தாக்கினார்கள். சிமியோன் அவர்களைத் தன் பட்டயத்தால் கொன்றுபோட்டு, லேவிக்கு முன்னதாகவே பட்டணத்திற்குள் வந்தார். அங்குள்ள ஆடு மாடுகள் மற்றும் மந்தையிலுள்ள அனைத்தையும், பெண்களையும் சிறுவர்களையும் பிடித்துக்கொண்டு தங்கள் தகப்பனாரிடம் வந்தார்கள்.

அவர்கள் பட்டணத்திற்குச் செய்ததை அறிந்த யாக்கோபு அவர்கள் மீது மிகுந்த கோபங்கொண்டார். அவர்களிடம், "என்னக் காரியம் செய்தீர்கள்? நான் இக்கானானியக் குடிகளுடன் மிகுந்த சமாதானத்துடன் வாழ்ந்து வந்தேன். நீங்கள் செய்த காரியத்தைக் கேள்விப்படும் மற்ற குடியினராகிய கானானியரும், பெரிசியரும், மிகவும் குறைவான எண்ணிக்கையில் வாழும் என்னையும், என்னுடைய எல்லாவற்றையும் அழித்து போடுவார்களே!" என்றார். அப்பொழுது சிமியோனும், லேவியும் மற்ற சகோதரர்களோடு சேர்ந்து, "இதோ நாம் அவர்களிடையே வாழ்ந்து வருகிறோம். சீகேம் நம்முடைய சகோதரிக்கு செய்ததை அறியீர்களா? சீகேம் செய்த காரியத்துக்கு நீங்கள் அமைதியாக இருப்பதென்ன? அவன் நம் சகோதரியை ஒரு வேசியைப் போல நடத்தலாமா?" என்றனர்.

சிமியோனும் லேவியும் அடிமைகளாய் பிடித்து வந்தவர்களில் பெண்கள் 85 பேர், ஆண்கள் 47 பேர். இவர்கள் யாக்கோபிற்கும் அவரது குமாரருக்கும் யாக்கோபு எகிப்திற்கு செல்லும் வரையிலும் அவர்களுக்கு வேலைக்காரராய் இருந்தார்கள். ஆனால் தப்பிச்சென்ற இருவர் தாப்னா என்னும் அண்டை ஊருக்கு வந்து சிமியோனும் லேவியும் தங்களுக்கும் தங்கள் கானானியப் பட்டணத்திற்கும் செய்த காரியத்தை விவரித்துச் சொன்னார்கள். இதைக் கேள்விப்பட்ட தாப்னாவின் அரசன் ஜஷப் இரண்டு பேரால் எப்படி ஒரு பட்டணத்தையே அழித்துவிட முடியும் என வியப்புற்று, இச்செய்தி உண்மையா எனக் கண்டறிய ஒற்றர்களை ஏற்படுத்தினார். அவர்கள் சென்று பட்டணம் அழிந்து கிடந்ததையும் மந்தைகள் இல்லாததையும் அரசனுக்குத் தெரிவித்தார்கள். நிம்ரோத்தின் நாட்களிலல்லவா இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றது? ஆகவே அவர் தன் மக்களை அழைத்து, "திடன்கொள்ளுங்கள். நாம் அனைவரும் சென்று இந்த எபிரெயர்களை அழித்து அந்நாட்டிற்காக பழிவாங்குவோம்" என்றார்.

அரசனின் ஆலோசகர்கள் இது இலேசான காரியம் இல்லை. அந்த எபிரெயர்கள் மிகவும் வலிமை வாய்ந்தவர்களாகத் தெரிகிறார்கள். இரண்டு பேரால் பட்டணத்தையே அழிக்கமுடியுமானால் நம்மை அழிப்பதுவும் கடினமல்ல. ஆகவே நாம் நம் அண்டை நாட்டு அரசர்களையும் அழைத்து இந்த யாக்கோபின் குமாரரோடு சண்டையிடப் போவோம் என ஆலோசனையளித்தார்கள். இவர்களது ஆலோசனை நன்றாகக் கண்டதால் ஜஷப், அமோரியர்களின் அரசர்களை துணைக்கு அழைப்பித்து, “நாம் ஒன்றாக சேர்ந்து அந்த யாக்கோபையும் அவர் குமாரரையும் சங்கரிப்போம்” என்றார். அந்த அண்டை அரசர்களான ஏழு அமோரிய அரசர்கள் தங்கள் படைகளுடனும் பத்தாயிரம் போர்வீரர்களுடன் உருவிய பட்டயத்தோடு யாக்கோபிடம் சண்டையிடப் புறப்பட்டனர். இதையறிந்த யாக்கோபு, சிமியோனையும், லேவியையும் நோக்கி, “நீங்கள் செய்த காரியத்தின் விளைவைப் பார்த்தீர்களா? என்னையும் என் சந்ததியையும் இந்த கானான் தேசத்திலே அழித்துப்போட எனக்கு எதிராக எழும்பியுள்ளீர்கள். நான் இம்மக்களோடே சமாதானமாய் வாழ்ந்து வந்தேனே, உங்களுடைய செயல் மற்ற குடியினரின் கோபத்திற்கு நம்மை ஆளாக்கிவிட்டதே!” என்றார்.

யூதா அவரை நோக்கி, “சிமியோனும் லேவியும் சீகேமிற்குச் செய்த காரியம் தவறெனில், சீகேம் நம்முடைய சகோதரிக்குச் செய்த காரியம் எவ்விதத்தில் சரியாகும்? சீகேம் கர்த்தருடைய கட்டளையை மீறி பாவம் செய்தபடியினால் தான் கர்த்தர் அவர்களை நம்முடைய சகோதரர் கையில் ஒப்புக்கொடுத்தார். சீகேமின் பாவமே அவன் பட்டணம் அழிவதற்குக் காரணமாயிற்று. தாங்கள் ஏன் பயப்படவோ கலங்கவோ செய்கிறீர்கள்? ஏன் தங்களுடைய கோபம் எங்கள் சகோதரர்களுக்கு விரோதமாக எழும்புகிறது? நம்மை சீகேமுக்கும் அவன் மக்களுக்கும் விடுவித்த தேவன் நமக்கு எதிராக வருகின்ற கானானிய அமோரிய அரசர்களின் கைக்கும் நம்மை விடுவிப்பார். தாங்கள் பயத்தைத் துறந்து, கர்த்தரின்மேல் நம்பிக்கைக் கொள்ளுங்கள். கர்த்தர் நம்மை அவர்களுடைய கைக்கும் தப்புவிக்க அவரை நோக்கி மன்றாடுங்கள்” என்றார்.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## ONE CHOICE

Jim was busy documenting an apology letter to his school Principal....

"I wish this undo option is applicable everywhere,

Thatha, is there a way to undo my yesterday's mistake???,

.....I wish I could go back in time to start over again

How wonderful it would be to have a time machine that will help me go back and fix all my wrong choices..." said the grandson Jim, lamenting about his wrong choice of copying in his exams.....

Jim was caught red handed for his malpractice by his teacher, and then his parents were summoned and warned by the principal while they stood ashamed in tears. Jim could not forget the shame he brought to his loving parents. Jim was worried how he can face his friends when he gets back to school.

"Yes, my grandson... this is a world full of choices!

Every choice that you make has a significance...

Every decision that you make leads us down a different road.

Even though the choices are uncountable,

All choices will either lead you on the road to ETERNAL LIFE or on the road to ETERNAL DEATH

Every wrong choice you make, you have to face the consequence.

No man can escape punishment, for your sin will identify you wherever you go.....Unfortunatley, this world cannot offer a choice of starting all over again. What is done cannot be wiped out...."

"Enough Thatha! Enough! You are making me more and more guilty and you make me feel awkward about my own self.... " said Jim in haste. Thatha interrupted saying, ....."But there is a Holy God who has carried all your shame and guilt on the Cross of Calvary. Come to JESUS, it is possible to begin a new life IF AND ONLY IF......

If you confess your sins truly and seek His forgiveness and repent of all wrong doings, He is ready to forgive you and accept you as His child.




"But Thatha, do you think that if I confess my sins, will it be erased forever?? What is done cannot be wiped out, isn't it?"

The Scripture promises that," For as high as the heavens are above the earth, so great is His love for those who fear Him; as far as the east is from the west, so far has He removed our transgressions from us", 1 John 1:9 says, " If we confess our sins, He is faithful and just and will forgive us our sins and purify us from all unrighteousness". We have a loving God who loves sinners but hates sin.

"Thatha, how can I be confident that Jesus will wash away my sins?" asked Jim doubting the power of Jesus. "Well, it's a matter of faith. You ought to believe every word said in the Bible. Apparently, God's word has never changed over the ages, He has been keeping His promises faithfully. The blood of Jesus has transformed many wretched sinners, the murderer Saul was transformed into a holy and righteous man of God. All that you need to do is confess your sins and receive the joy of being saved by the power of Jesus. He will turn you into a righteous one and He will guide you from now on to lead a righteous life. ..." said thatha.

Jim's eyes welled up with tears, he believed every word his thatha said. He then closed his bedroom and knelt beside his bed with a broken heart and pleaded Jesus to cleanse him.....

Jim's life was never the same again after he made the choice of accepting Jesus as his saviour. Whether at home or outside, Jim was always a shining example for others in all walks of life.

# திருச்சபை ஜெபநாள் 04-02-2018 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும், ..... உமது உருக்கமான இரக்கங்களின்படி என்னைக் கடாட்சித்தருளும்," சங்கீதம் 69:16

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- Junior Church Anniversary, Teachers Retreat மற்றும் நமது சபையின் இன்பச்சுற்றுலா யாவும் கர்த்தருடைய கிருபையால் சிறப்பாக நடைபெற்றதற்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- கிறிஸ்துமஸ், புத்தாண்டு கால வழிபாடுகள், சிறப்பு நிகழ்வுகளுக்காக
- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
